**DVC No.14/2023 ம.சா.1: நிதர்ஷனா க/பெ.மயில்வாகனம் நாள்: 04.07.2025**

**எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை:**

எனக்கும் 1ஆம் எதிர்மனுதாரருக்கும் இடையில் 02.11.2016 ஆம் தேதியில் திருமணம் நடைபெற்றது. எதிர்மனுதாரர் இல்லத்தில்தான் திருமணம் நடைபெற்றது என்றால், சரிதான். திருமணம் முடிந்த பின்பு பெண்வீட்டார் பெண்ணுக்கு குத்துவிளக்கு கொடுத்து ஆண் வீட்டிற்கு அனுப்புவார்கள் என்றால், சரிதான். அந்த பாரம்பரியமாக குத்துவிளக்கில் மணப்பெண் விளக்கேற்றுவார் என்றால், சரிதான். பொதுவாக மணப்பெண் வீட்டில் இரண்டு விளக்குகள் கொடுக்கப்பட்டு அது நிரந்தரமாக கணவர் வீட்டில் இருக்கும் என்றால், எனக்கு எனது குடும்ப பாரம்பரியமான குத்துவிளக்கை கொடுத்துவிட்டார்கள். அது மட்டுமின்றி தனியாக இரண்டு குத்துவிளக்குகள் வாங்கிக்கொடுத்தார்கள். பாரம்பரியமான குத்துவிளக்குகளில் ஒன்று உடைந்திருந்ததால் 1ஆம் எதிர்மனுதாரர் வீட்டில் இருக்கட்டும் என்று கூறி புது விளக்கு வாங்கிதருவதாக கூறினார் என்றால், இல்லை. தவறு. நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால், சரியல்ல. பொதுவாக திருமணமான பெண்கள் சாதாரன சண்டைக்கெல்லாம் தாலியை கழட்டி கொடுக்கமாட்டார்கள் என்றால், சரிதான்.

2) உடைந்த விளக்கை வீட்டில் இருக்கட்டும் என்று 1ஆம் எதிர்மனுதாரர் கூறியதற்கு நான் கோபப்பட்டு தாலியை கழட்டி வீசினேன் என்றால், சரியல்ல. பின்பு மறுநாள் நானாகவே அந்த தாலியை எடுத்து அணிந்துக்கொண்டேன் என்றால், சரியல்ல. மேற்படி சம்பவம் குறித்து 1ஆம் எதிர்மனுதாரர் எனது பெற்றோரிடம் தகவல் தெரிவித்து ஆலோசனை கூறினார் என்றால், சரியல்ல. நான் உடனே கோபித்துக்கொண்டு எனது தாயாரின் வீட்டிற்கு சென்றேன் என்றால், இல்லை. எனது பெரியப்பாவின் பெயர் கலாநேசன் என்றால், சரிதான். எனது பெரியப்பா கலாநேசனும் மற்றும் சில நபர்களும் என்மேல்தான் தவறு உள்ளதென்று எனக்கு ஆலோசனை கூறினார்கள் என்றால், சரியல்ல. அதன் பின்பு கோபித்துக்கொண்டு 1ஆம் எதிர்மனுதாரரின் வீட்டிற்கு ஒரு மாதம் கழித்து வந்தேன் என்றால், சரியல்ல. 2017 மே மாதம் 1ஆம் எதிர்மனுதாரர் பழைய வீட்டிற்கு சென்று விளக்கேற்றவேண்டும் என்று என்னை அழைத்தார் என்றால், இல்லை. அந்த சமயத்தில் 1ஆம் எதிர்மனுதாரர் வீட்டில் நீங்கள் இருந்து கொண்டு 1ஆம் எதிர்மனுதாரர் பெட்ரோல் நிரப்பி வந்து அழைத்து செல்கிறேன் என்று கூறினார் என்றால், இல்லை. தவறு. 1ஆம் எதிர்மனுதாரர் பெட்ரோல் நிரப்பிவிட்டு வருவதற்குள் நான் வீட்டில் இல்லை என்று அவர் அக்கம் பக்கம் தேடி விசாரித்தான் என்றால், பொய்.

3) மேற்படி சம்பவத்தில் தொடர்ச்சியாக அதே நாள் இரவு 10.00 மணியளவில் நான் காரில் 1ஆம் எதிர்மனுதாரரின் வீட்டிற்கு வந்தேன் என்றால், தவறு. எனது கணவரான 1ஆம் எதிர்மனுதாரர் எங்கே போனாய் என்று கேட்டார் என்றால், இல்லை. கேட்டதற்கு நான் அவரிடம் எனது பேற்றோர் வரதட்சணை கொடுமை என்று புகார் அளிக்க சொன்னார்கள் என்று கூறினேன் என்றால், இல்லை. மேற்படி சம்பவம் சம்மந்தமாக நான் அறந்தாங்கி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகாரளித்தேன் என்றால், சரிதான். மேற்படி காவல் நிலையத்தில் நான் சாதாரண குத்துவிளக்கு சம்மந்தப்பட்ட பிரச்சனை என்று கூறினேன் என்றால், இல்லை. நான் எனது கணவர் வீட்டில் வரதட்சனை கேட்டு கொடுமை படுத்துவதாகத்தான் புகாரளித்தேன். மேற்படி காவல் நிலையத்தில் பொய்யான புகார் கொடுக்கக் கூடாது என்றும், சாதாரண குத்துவிளக்கு பிரச்சனைக்கு வரதட்சணை கொடுமை என்று புகார் அளிக்ககூடாது என்று எனது பெற்றோரை கண்டித்து அனுப்பினார்கள் என்றால், தவறு. சரியல்ல.

4) மீண்டும் நான் எனது மகனை எதிர்மனுதாரர்கள் கடத்தியதாக கூறி அறந்தாங்கி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால், தவறு. சரியல்ல. மேற்படி புகார் தொடர்பாக எனது பெற்றோரை கண்டித்து அறிவுரை கூறினார்கள் என்றால், சரியல்ல. நான் கருவுற்றிருக்கும்போது டாக்டர்.யமுனா என்பவரிடம் சென்றேன் என்றால், சரிதான்.

(குறுக்கு விசாரணையின் தொடர்ச்சியானது வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

**மறுவிசாரணை:**

இல்லை.